முதல் அறிக்கை

சர். பி. தியாகராய செட்டியார்

1949 ஜூன் | திராவிடமணி பதிப்பகம் தெப்பக்குளம் :: திருச்சி | விலை 3 அணா

பதிப்புரை

தென் இந்திய சரித்திரத்தில் திராவிட மக்களின் சுதந்திரப் போர் இருவகைப்பட்டதாகும். ஒன்று அரசியல் எழுச்சி; மற்றொன்று சமுதாயக் கிளர்ச்சி.

முன்னைய எழுச்சிக்குக் காரணமாயிருந்தவர் காலஞ் சென்ற மாபெருந் தலைவர் **சர். பி. தியாகராய செட்டியார்.** பின்னைய கிளர்ச்சிக்கும்—விடுதலைக்கும் தோன்றாத் தலைவராய்த் திகழ்பவர் **பெரியார் ஈ. வெ. ராமசாமி.**

சென்ற 1914-ம் ஆண்டு உலக மகாயுத்த முடிவில் நாட்டில் புதியதோர் நிலை ஏற்பட்டது. 'ஹோம்ரூல்' என்ற பெயரால் ஆரியர்கள் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற பெரும் சூது செய்தனர். கண்ணுற்ற திராவிடத் தலைவர்கள் 1916-ம் ஆண்டு நவம்பர் 20-ம் நாள் சென்னையில் திரண்டுகூடி நம் மக்களின் பாதுகாப்பு—அரசியல் விடுதலைக்கு சிந்தித்து வழி பல வகுத்தனர். அவற்றின் விளைவே **ஜஸ்டிஸ் கட்சி**—தென்னிந்திய நல உரிமைச் சங்கம். "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "சமதர்சனி" என்ற தினசரிப் பத்திரிகைகளும்.

ஜஸ்டிஸ் கட்சி பெயரால் சர். பி. தியாகராய செட்டியார் அன்று நம் மக்களுக்கு விடுத்த **முதல் அறிக்கையே** திராவிட மக்களின் ஆதி சாசனம்.

அரசியல்—சமுதாய விடுதலைத்தலைவாயிலை நெருங்கிச் சென்று கொண்டிருக்கும் நம் மக்கள், கடந்தகால சரித்திரத்தையும் ஒரு பொழுது கண்பார்க்கட்டுமென்று நாமும் இச் சிறு நூலைத்தருகிறோம்.

முதல் அறிக்கை

இந்திய குடியாட்சி (Home Rule) இயக்கம் குறித்து இந்த மாகாணத்தில் உள்ள பல்வேறு முக்கிய பார்ப்பன ரல்லாத இந்திய வகுப்பு மக்களின் மனோபாவம் என்ன என்று விளக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படவும், அவர்களின் தற்கால அரசியல் நிலைமை சம்பந்தமாக சில உண்மைகளைக் குறிப்பிடவும் காலம் வந்துவிட்டது. இந்த மாகாணத்தின் 415-லட்சம் மக்களுள் 400-லட்சத்துக்குக் குறையாமல் பார்ப்பனர் அல்லாத [திராவிட] மக்கள் இருக்கிறார்கள். வரி கொடுக்கும் மக்களுள் பெரும்பான்மையோர், ஜெமீந்தார்கள், நிலச்சுவான்தார்கள் விவசாயிகள் எல்லாரும் இந்த வகுப்பு மக்களேயாவார்கள். ஆனால் சென்னைமாகாண அரசியல் என்று சொல்லப்படுவதில் அவர்களுக்கு உரித்தான பங்கை அவர்கள் அடையவில்லை. தேசத்தின் பொது அரசியல் முன்னேற்றத்துக்கென அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பாமரமக்களிடையே சிறிதும் உபயோகிப்பதில்லை. பொதுநலன்களைப் பாதுகாக்கவும் வளர்த்துப்பெருக்கவும், கிரமமான ஸ்தாபனங்கள் அவர்களுக்குக் கிடையாது. அரசியலைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களும், தேசத்திலே போதுமான பிடிப்பு, செல்வாக்கு இல்லாத பிறரும், பிரபல தலைவர்களாகப்– பிரதிநிதிகளாகத் தான்தோன்றிகளாய் வருவதைத் தடுக்கவும் பார்ப்பனர் அல்லாதாரிடை எவ்விதமான ஒரு ஸ்தாபனமும் கிடையாது. அவர்கள் சார்பில் உண்மை விஷயங்களை எடுத்துரைக்கவும் அவர்களுக்கென ஒரு பத்திரிகையும் கிடையாது. ஆகவே 15-லட்சம் மக்களே உள்ள பார்ப்பனர் (ஆரியர்)களின் நிலைமையுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது, பார்ப்பனரல்லாத (திராவிட) மக்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன.

சர்க்கார் உத்தியோகங்கள்.

1913-ல் சர்க்கார் உத்தியோகக் கமிஷன் முன்பாக சாட்சியம் அளித்த, அந்த நாள் சென்னை நிர்வாகசபை அங்கத்தினர்கள் அலெக்சாண்டர் கார்டியூ, இந்த மாகாணத்தின் சர்க்கார் உத்தியோகங்களில் பார்ப்பன— ஆரியர்களது நிலைமையையும் பார்ப்பனரல்லாதாரது (திராவிடர்) நிலைமையையும் விவரமாக எடுத்துரைத்தார். அவரவ்விதம் விளக்கியது பார்ப்பனரல்லாத மக்களின் நலனை உத்தேசித்துக் கூறியதல்ல என்றாலும், இந்திய சிவில் சர்வீஸில் சேர இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் பரீட்சைகள் ஏற்பாடு செய்யப்பட்டால், நிச்சயமாக பார்ப்பனர்களாகிய "சிறுபான்மை ஏகபோகச் சாதியினர்" சர்வீஸ் முழுவதையும் ஆக்கிரமித்துக்கொள்ளுவார்கள் என்பதை எடுத்துக்காட்டும் கருத்துடனேதான் அவர் சாட்சியமளித்தார். 1892-க்கும் 1904-க்கும் இடையே நடைபெற்ற மாகாண சர்க்கார் வேலைத்தேர்வுப் போட்டிப் பரீட்சைகளில், வெற்றிபெற்ற 16-நபர்களுள் 15-பேர் பார்ப்பனர்கள், அவர்கள் அதாவது 95 சதவிகித வெற்றி பார்ப்பனருக்கே கிடைத்தது என்று அலெக்சாண்டர் குறிப்பிட்டாராம். 20-வருஷங்களுக்கு முன் மைசூர் சமஸ்தானத்தில் அந்த சர்க்காரின் உத்தியோகங்களுக்கென பகிரங்கப்போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டதில், பார்ப்பனர்கள் 85 சதவிகிதத்துக்கு காலிஸ்தானங்களைக் கைப்பற்றினார்கள் சென்னையில் உதவி எஞ்சினியர்கள் நியமனத்துக்கு நடந்த போட்டியில், அதே காலத்தில் வெற்றிபெற்ற அபேட்சகர்களுள் 17-பேர் பார்ப்பனர்— ஆரியர், 4-பேர்தான் பார்ப்பனரல்லாதார்— திராவிடர். கணக்கு இலாகாவிலும் நடத்தப்பட்ட போட்டிகளிலும் இவ்விதமான முடிவுகளே காணப்

பட்டன. அந்தக்காலத்தில் சென்னையில் இருந்த 140 டெப்டி கலெக்டர்களுள், 77-பேர் பார்ப்பனர்— ஆரியர் 39-பேர் பார்ப்பனரல்லாத இந்துக்கள்— திராவிடர்கள். மீதி முகம்மதியர்கள் இந்தியக் கிறிஸ்தவர்கள், ஐரோப் பியர்கள் ஆங்கிலோ இந்தியர்கள்.

இதில் விநோதம் என்னவென்றால் போட்டிப் பரீட்சைகள் இல்லாதபோதிலும், உதாரணமாக மாகா ணத்தின் கீழ்த்தர நீதி இலாகா உத்தியோகங்களிலும் உத்தியோகங்களுள் பெரும்பகுதி பார்ப்பனர்கள் வசமே இருந்தன! சர். அலெக்சாண்டர் கூறியபடி, 1913-ல் மொத்தம் 128 நிரந்தர ஜில்லா முனிசீபுகளில் 93-பேர் பார்ப்பனர்கள், 25-பேர் பார்ப்பனரல்லாத இந்துக்கள். மீதியோர் முகம்மதியர்களும், இந்தியக் கிறிஸ்துவர் களும், ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களுமாகும்.

இந்த புள்ளி விவரங்களில் இருந்தும் இதுபோன்ற கணக்குகளின் மூலமாகவும், சர்க்கார் உத்தியோகங்களுக் காக இந்தியாவில் பகிரங்கப்போட்டி என்றால் உத்தி யோகங்களை ஏகபோகமாகப் பார்ப்பன (ஆரிய) வகுப்பி னரே வைத்துக்கொள்ளுவதென்றும் பார்ப்பனரல்லாத (திராவிட)மக்களை அறவே ஒதுக்கிவிடுவதென்றும் சர் அலெக்சாண்டர் தீர்மானிக்க வேண்டியவரானார். சென்னை சர்க்கா[illegible] நேரடி ஆதிக்கத்தின் கீழிருக்கும் முக்கிய சுதேச சமஸ்தானங்களில் உள்ள நிலைமையை— இன்றுபோல அன்றுச் சர்க்கார் உத்தியோகங்கள் பெரு வாரியாகப் பார்ப்பனர்கள்— ஆரியர் வசமே இருப்பதை சர்க்கார் உத்தியோகக் கமிஷனின் கவனத்துக்குக் கொண்டுவர அலெக்சாண்டர் தவறினார்; அத்துடன் அநேகமாக சிபார்சுமூலமாகவே எடுக்கப்படும் கீழ்த்தர உத்தியோகங்கள் சம்பந்தமான புள்ளி விவரங்களையும்

அவர் கவனிக்கத் தவறினர். அதிலும் கண்டிப்பாக பார்ப்பனர் ஆதிக்கம் மேலோங்கியிருப்பது நன்முக விளங்கியிருக்கும்.

சர்க்கார் உத்தியோகங்களில் பலவித இலாக்காக்களிலும் இன்றைய நிலைமை என்ன என்பதற்குப் புள்ளி விவரங்கள் தேவையில்லை. இந்த மாகாணத்தில் இந்தியர்களுக்கென அனுமதிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த உத்தியோகங்கள் குறித்தும், அவை வினியோகிக்கப்படும் கொள்கை, அடிப்படை இவைகளையும் நாம் கவனிக்காமல் இருக்கவும் முடியாது. கவர்னரது நிர்வாகக் கவுன்சிலில் இந்தியர்கள் இருக்கலாம் என்று ஏற்பட்டு விட்டதால், மூன்று கனவான்கள் தொடர்ச்சியாக அதில் இடம் பெற்றிருக்கிருர்கள்; இதில் பின்னிட்டு வந்த இருவர் பார்ப்பன வக்கீல்கள்; இந்திய நீதிபதிகள் ஐவருள் நால்வர் இந்து நீதிபதிகள், அனைவரும் பார்ப்பனர்கள். 1914-ல் சர்க்காரின் புது செகரட்ரியேட் காரியாலயம் ஏற்படுத்தப்பட்ட உடனே ஒரு பார்ப்பன அதிகாரி அதில் நியமனம் பெற்ருர். ரெவினியூ போர்டுக்கு உண்டான இந்திய செக்ரடரி ஒரு பார்ப்பனர்; மாகாண சிவில் சர்விசில் அனுமதிக்கப்பட்ட இரண்டு கலெக்டர் ஸ்தானங்களுள், முகம்மதியர் அல்லாத இதர வகுப்பாரின் பங்கென ஒதுக்கப்பட்டதும் அநேகமாக ஒரு பார்ப்பன அதிகாரிக்கே கிடைத்தது.

பொது ஸ்தாபனங்கள்.

சர்க்கார் வேலைகளில் உள்ள உண்மை நிலைமையே இதர ஸ்தல பொது ஸ்தாபனங்களுக்கும் பொருந்துவதாயிற்று. பெரும்பாலும் பார்ப்பனர் (ஆரியர்)களே மிகுந்த

ஒரு தொகுதியில், பார்ப்பனரல்லா திராவிடனுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதே வெகு அரிதாயிற்று. பார்ப்பனர் அல்லது பார்ப்பனரல்லாதார் என்று எந்த ஒரு நபரையும் பார்ப்பனரல்லாதார் குறிப்பிடாதிருக்கும்போது, பார்ப்பனர்கள் எப்போதுமே ஐக்கியமாக தங்கள் ஜாதியான் ஒருவனையே பெரிதும் ஆதரித்து வருவதான நிலைமையே என்றும் இருந்து வருகிறது.

சென்னை சர்வகலாசாலையில், பலவித இந்தியர் பிரிவுகள் வகுக்கப்பட்டிருப்பினும் பெரும்பான்மையினர் பார்ப்பனர்களே. ஸ்தல சட்டசபை கவுன்சிலுக்கு அவர்கள் என்றுமே ஒரு பார்ப்பனரல்லாதாரைத்— திராவிடரைத் தேர்ந்தெடுத்தது கிடையாது. அப்படி ஏதேனும் ஒரு பார்ப்பனரல்லாதார் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால், அது ஐரோப்பியர் ஆதரவு காரணமாகவே நேர்ந்திருக்கும். அப்படியாக எவ்வளவு தகுதியாம்சங்கள் கொண்டிருந்தாலும் பார்ப்பனரல்லாத இந்தியன் சட்ட சபைக் கவுன்சிலில் ஸ்தானம் பெறும் சந்தர்ப்பமே கிடையாதவனானான். 1914-நவம்பரில் கூடிய சென்னை மேல் சட்டசபையில் காலஞ்சென்ற குன்னிராமன் நாயரின் கேள்விக்கு சர்வகலாசாலையில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை மொத்தம் 950; இதில் 452 பேர் பார்ப்பனர்கள்— ஆரியர்கள்; 124-பேர் பார்ப்பனரல்லாத இந்துக்கள்— திராவிடர்கள். இதர வகுப்பினர் 74-பேர். 1907-ல் பட்டதாரிகளுக்குப் பிரதிநிதித்துவம் ஆரம்பமானது முதல், 12-பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதில் ஒருவர் தவிர மற்றவர்கள் அனைவருமே பார்ப்பனர்கள் எனப் பதில் கிடைத்தது.

1907-க்கு முன் குறிப்பிட்ட சில வருஷகால அனுபவம் உள்ள பட்டதாரிகளுக்கு மட்டுமே தேர்ந்து எடுக்கும்

உரிமை உண்டென்ற முறையிருந்தபோது, 1914ல் இருந்து மேலே கண்டவாறாக மேல் சட்ட சபையில் பதில் கூறப் பட்டது வரையிலும் பெரும்பாலும் பாப்பனர்களே நிறைந்து வந்திருக்கும் சென்னை சர்வ கலாசாலையில், சர்வ கலாசாலை பட்டதாரிகள் பிரதிநிதியென ஒரு பார்ப்பன ரல்லாதார் கூட தேர்ந்தெடுக்கப்பட்டதாக நாம் அறி யோம். ஆக எவ்வளவு பெருமையும் தகுதியும் கொண்டவ ரையினும், தேர்தல் என்னும் "திறந்த கதவு" வழியாக சென்னை சட்டசபையில் பார்ப்பனரல்லாதாருக்கு இடம் கிடைப்பது துர்லபமாயிற்று. இத்தகைய நிலைமையே, இம்பீரியல கவுன்சில்களிலும் இதர சட்டசபைகளிலும் முனிசிபாலிடிபோன்ற ஸ்தாபனங்களிலும் காணப்படுவதா யிற்று; காரணம் தேர்தல்முறை ஏகபோகமாக ஒரு தனிப் பட்ட வகுப்பினருக்கே அனுகூலமாக இருப்பதே யாகும்.

தப்பித்தவறி ஆட்சிக்குப் பொறுப்பாளராயிருப்பவன், போதுமான பிரதிநிதித்துவம் பெறாத வகுப்பினரிடையே நியமன மூலம் அதிகப்படி அங்கத்தினர்களை "நாமினே ஷன்" செய்து, பார்ப்பன— ஆரிய ஆதிக்கம் காரணமாக ஏற்பட்ட சமத்துவமின்மையைச் சமன்செய்ய விரும்பி, திருத்த முயற்சிப்பானே யானால், பார்ப்பன ஆரியப் பத்திரிகைகள் கடுங் கண்டன மூலம் உடனே ஓலமிட லாயின! உதாரணமாக மேல் (சட்ட) சபைகளில் நியமன மூலம் அங்கத்தினர்களை அமர்த்திய பெண்ட்லண்டு பிரபு மீது பத்திரிகைகள் சீற்றம் அனைவரும் அறிந்ததே! அநேக மாக சர்க்காரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும் இந்த பொறுப்புள்ள ஸ்தானங்களுக்கு வெளியிலுள்ள சென்னை நகரிலும் இதர ஜில்லாக்களிலும் உள்ள அரசியல் ஸ்தாப னங்களின் தேர்தல் புள்ளி விபரங்கள் அதே நோக்கத் தையே அறிவிப்பதாக உள்ளன. சமீபகால நிகழ்ச்சி

களுள் ஒன்றை எடுத்துக்காட்டாக உரைப்போம்: அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இந்த மாகாணத்தின் பிரதிநிதிகள் 15 பேருள் பார்ப்பனரல்லாத இந்தியர் (திராவிடர்) ஒருவரைத்தவிர, மற்றவர்கள் அனைவரும் பார்ப்பனர்களாக (ஆரியர்கள்) அமைந்துவிட்டார்கள் ஆயினும் என்ன? காங்கிரஸ் மகாசபையின் நிர்வாக ஸ்தாபனமாகிய இக்கமிட்டியின் முடிவு, யுத்தத்துக்குப்பின் இந்த நாட்டின் அரசியலமைப்பு போன்ற மாபெரும் முக்கியத்துவம் கொண்ட பிரச்னைகளில், இம்மாகாணத்தில் பெரும் பகுதி மக்களான 400 லட்சம் பார்ப்பனரல்லாத (திராவிட) மக்களின் ஏகோபித்த அபிப்பிராயமாக உலகத்தின் முன் எடுத்துகாட்டப்படும். சலுகைகளும் உரிமைகளும் அதிக தாராளமாக வழங்கப்படும் போது. தனிப்பட்ட ஜாதியினர் மேலும் தனி சலுகை உடையவர்களாக ஆவது நமது துரதிருஷ்ட அனுபவமேயாகும்.

பார்ப்பனரல்லாதாரும் கல்வியும்.

இவ்விதம் அரசியல் அதிகாரத்திலும், அத்தகைய அதிகாரத்தை அளிக்கும் சர்க்கார் உத்தியோகங்களிலும் ஏகபோகமான வாழ்வுக்கு ஆதாரமாக, அனுசரணையான காரணமாய், இம் மாகாண மக்கள் எண்ணிக்கையில் பார்ப்பனர் சிறு அளவினரே ஆயினும் சர்வகலாசாலை யோக்கியதாம்சங்களில் இதர வகுப்பினர்களை விட மிக முன்னேற்றம் அடைந்திருப்பதாகக் காட்டப்படுகிறது. இதை யாரும் மறுக்க வில்லை பழங்கால முதல் இருந்து வரும் சம்பிரதாய பழக்க வழக்க விதி முறைகள், பார்ப்பனர்கள் உயர் ஜாதியினர், இந்துக்களிலே மிக புனிதமான பிரிவினர், அவர்களுடைய தொழிலின் பழமைசால்

தன்மை, தெய்வீக இயல்பு கொண்ட பல கடவுள்களிடமாக மனிதர்களது ஆத்மா விமோசனம் பெற, ஆசிர்வாதம் அடைய பார்ப்பனர்களே தெய்வீக அனுமதி பெற்ற தரகர்கள் என வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் அவர்கள் அமைத்து விட்ட ஆதாரங்களிலே பிற வகுப்பு மக்களுக்கு ஏற்பட்டு விட்ட அசைக்க முடியாத நம்பிக்கை, அந்த நம்பிக்கை காரணமாக உடலுழைப்பில் இருந்து பார்ப்பனர்கள் விடுதலை பெற்றது —இவையெல்லாம் புராண இதிகாசகாலங்களே போன்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலும், ஏராளமாக இதர சாதியினர் வகுப்பினர்களை விட, மிகவும் வெற்றிகரமாகப் புது நிலைமையிலும் சரிவர அவர்களை அமைத்துக்கொள்ளப் பெரிதும் உதவின. ஆங்கிலக் கல்வி தவிர்த்து, விவசாயத்தில் பரம்பரையாக சிரத்தை கொண்டு அதுவே சமூகத்திலே கண்ணியமும் செல்வாக்கும் தரும் என நம்பி, அதன் மூலமாகவே இம்மாகாணம் நிதானமாகவும் நிலையாகவும் வளர உதவிய, மாகாணத்தின் பெருவாரி மக்களாக இருப்பவர்கள் ஒன்றுமற்றவர்களாக கணக்கிடப்பட்டு விடுவதா? சரிதிரம் அறியாத கால முதற்கொண்டு இந்த நிலைமையிலே வாழ்ந்து வரும் வகுப்பினர்களும் சாதியினர்களும் சர்க்காரின் ஆதரவு பெறக்கூடாதா? கல்வித்துறையில் மட்டும், பார்ப்பன சாதிகளுக்கே நன்மைகள் என்று மில்லை. காலம் தாழ்த்துமெனினும், பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேற ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது அபிவிருத்தியின் பல கட்டங்களில் அவர்கள் காணப்படுகிறார்கள் சில சாதியினர், அதாவது செட்டியார், கோமுட்டிகள், முதலியார், நாயுடு, நாயர் இவர்கள் மளமளவென அபிவிருத்தி பெற்றுவிட்டார்கள். முன்னேற்றம் குறைந்து காணப்படும் சமூகத்தினரும் தங்களால இயன்றளவு மேலும் அபிவிருத்தியடைய தீவிர

மாக முயன்று வருகிறார்கள்; புது யுகத்துக்கேற்ற தரத்தை அடைய பாடுபடுகிறார்கள். கல்வித்துறையில் அபிவிருத்தி யடைய காட்டப்படும் உணர்ச்சி அபாரம்; பார்ப்பனர்களை விட, அதிக ஒற்றுமையுடனும், ஒரு துறையில் மட்டுமேயில்லாமல் பல பிரிவுகளிலும் சில பார்ப்பனரல்லாத சமூகத்தினர் அபிவிருத்தி பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பிற்பட்ட வகுப்பினரைப் போன்று, பார்ப்பனப் பெண்களுக்கும் பார்ப்பன விதவைகளுக்கும் எந்தக் காரணம் பற்றியோ தனிப்பட்ட ஆதரவு காட்டி சர்க்கார் கல்வி போதனைக்கு உதவியும் கூட, நாயர்கள் போன்ற பார்ப்பனரல்லாத வகுப்புப் பெண்களில் படித்தவர்களின் சதவிகிதம் பார்ப்பனர்களைவிட அதிகமாக காணப்படுகிறது. பல வகைகளிலும் பலவித வாழ்க்கைத் துறைகளிலும், சர்வசாதாரணமாக பார்ப்பனரல்லாதார் இப்போது காணப்படுகிறார்கள்; ஆனாலும் இந்த மாகாணத்தின் ஒழுக்கத்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அவர்கள் உதவி வருவது குறைந்துவிடவில்லை. இத்தகைய மக்களுக்கு இந்த மாகாணத்திலே ஆதரவு தருவார் யாருமில்லை. காரணம் அரசியல் துறையிலும் சர்க்கார் உத்தியோகங்களிலும் பார்ப்பனர்கள் கொண்டு செலுத்தும் ஆதிக்கமும் செல்வாக்குமேயாகும்.

ஸ்தாபனமில்லாத குறை.

அறிவுப் போட்டி பெருகி வரும் இந்த நாட்களில் பரிட்சைகளிலே தேர்ச்சி பெறும் திறமை, மதிக்கத்தக்க தனிப்பெரும் சொத்து என்பதை நாம் மறக்கவில்லை. ஆனால் சுற்றிலும் உள்ள மக்களை விட அதிக சதவிகிதம்

ஆங்கிலமறிந்த ஆண்களைக்கொண்ட சிறு வகுப்பினர், சர்க்கார் உத்தியோகங்கள் சிறியவை பெரியவை உயர்ந்தவை, தாழ்ந்தவை எல்லாவற்றையும் ஏகபோகமாக [பிற வகுப்பினருள்ளும் தகுதியுடையவர்கள் கொஞ்ச பேர்களேனும் திறமையும் கலாசாரப்பண்பும் அறிவு நிட்சண்யமும் கொண்டவர்கள் இருந்தும்] அனுபவிக்க ஏன் அனுமதிக்கப்பட்டு வர வேண்டும்? பார்ப்பனரல்லாதாருள், அவர்களுக்குப் பலவித இடையூறுகள் இருந்தும் கூட நிர்வாக, நீதி இலாகா அதிகாரிகளாகவும், கல்வி நிபுணர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், மருத்துவ நிபுணர்களாகவும், எஞ்சினியர்களாகவும், பொதுஜனப் பிரமுகர்களாகவும் பெரிய முக்கிய ஜாகீர்களையும் ஜமீன்களையும் வெற்றிகரமாக பரிபாலித்து நிர்வாகம் செய்யக் கூடியவர்களாகவும், பிரசித்தியும் திறமையும் மிக்கவர்கள் —பார்ப்பனர்களுக்கு சமமானவர்கள் எவருமே இல்லை என்னும் அளவுக்கு திறமைசாலிகளும் அறிவாளிகளும் இருப்பதை மறுக்கமுடியாது. சுயமரியாதை உணர்வும் சுயநலத் தூண்டுதலும் கொண்டு. அவர்கள் எப்போதுமே நடந்து கொள்ளுகிறார்கள்— அரசியல் அதிகாரத்திலும் சர்க்கார் உத்தியோகங்களிலும் கூட; இல்லையேல் அவர்களுக்கு உரித்தான உயர்ந்த அந்தஸ்தில் அவர்கள் வெகு காலத்துக்கு முன்பே இருந்து வருவார்கள்- திறமையோடு செயலாற்றும் ஒரு ஸ்தாபனம் அவர்களுக்கென அவர்களது உரிமைகளை, சலுகைகளைக் கண்காணித்துப் பாதுகாக்க, அவர்களைப்பற்றி தாராள விளம்பரம் தந்து கொள்ள இல்லாத காரணத்தால், அவர்கள் சரிவர கவனிக்கப்படவும் அங்கீகரித்து ஏற்கப்படவும் இல்லாது போயினர்.

முன்னேற்ற அரசியல் அபிவிருத்தி தேவை— சட்ட ரீதியற்ற ஸ்தாபன அமைப்பு அல்ல.

இன்றைய அரசியல் நிலைமைக்குத் திறவுகோலாக உள்ள அந்தஸ்துடன் திருப்தியடையாது, தற்போதைய நிலைமைக்கே நாம் தகுதியுடையவர்களா என்றும் கவனியாது புது அரசியல் சலுகைகளை கேட்கும் போதும் மகிழ்வடையாத, இம் மாகாணத்தின் தீவிர அரசியல் வாதிகள் இப்போது "ஹோம் ரூல்" கோருகிறார்கள்; சென்ற கால அனுபவப்படி தக்ககாலத்து எச்சரிக்கைச் சங்கை நாம் ஊதாவிட்டால், இந்தியா முழுவதுமே "ஹோம் ரூல்' பெற துடிக்கிறது என்பதாக அர்த்தம் கொள்ளப்பட நேரும் என்பதாக நாம் அஞ்சுகிறோம். இந்த ஊதாரித்தனமான திட்டத்தின் விவரங்கள் பற்றி நாம் ஆராய்வது நாம் எடுத்துக் கொண்ட காரியத்துக்கு அவசியமன்று; இப்பீரியல் சட்ட சபை கவுன்சிலர்கள் 19 பேர் கூடி மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவுக்கு சமர்ப்பித்துள்ள மகஜர் பற்றியும் நாம் கவனிக்க வேண்டியதில்லை. இந்தியாவின் இன்றைய அமைப்பு சந்தர்ப்பங்களிலே, சகல சாதி வகுப்பு மக்களையும் சமத்துவமாக நடத்தி, சமாதான நாடுகளுள் ஒன்றாக, பொதுவான லட்சியம், பொது தேசபக்தி இல்லாமல் நிர்வாகம் நடத்தக்கூடியவர்களான பிரிட்டிஷாரின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் குழி பறிக்கும், பறிக்கக்கூடிய எவ்வித திட்டத்தையும் ஆதரிக்க நாமின்று விரும்பவில்லை. சட்டபூர்வமல்லாத இந்திய அரசியலமைப்பு வேலையில்—, ஒரு சில செல்வாக்கு படைத்த அரசியல் வாதிகளின் இஷ்டப்படி முழுவதுமாக விலகியிருக்கவே நாம் விரும்புகிறோம் என்றாலும், வளர்ச்சி தரும் அரசியல்

அபிவிருத்திக்கு — திறமையும் எழுச்சியும் விழிப்பும் கொண்டு விட்ட மக்களிடம் நம்பிக்கை கொண்டு நன்கு வகுக்கப்பட்ட ஒரு கொள்கைக்கு நாம் பெரிதும் ஆதரவு அளிக்கிறோம் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறோம். காலஞ்சென்ற ஏ. ஓ. ஹியூம், டபிள்யூ. சி. பானர்ஜி, பத்ருதீன் தியாப்ஜி, எஸ். ராமசாமி முதலியார், ரங்கையா நாயுடு, ராவ் பகதூர் சபாபதி முதலியார், ஸ்ரீ சங்கரன் நாயர் போன்ற அறிவாளிகளும் சிந்தனைச் செல்வர்களும் நேரடியாகக் கவனித்து வளர்த்த இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கத்தின் அந்த ஆரம்ப காலங்களில், இம் மாகாண முழுவதிலும் உள்ள அறிவுடைய பார்ப்பனரல்லாத (திராவிட) பிரமுகர்கள் தங்களது மனமார்ந்த விசுவாசம் நிரம்பிய ஆதரவை அளித்தார்கள். அப்பொழுது அந்த ஸ்தாபனம், உருவிலும் பெயரிலும் இல்லாவிடினும் நோக்கத்திலும் முறைகளிலும் உண்மையாகவே தேசிய ஸ்தாபனமாக இருந்தது. இன்றும் பழைய இலட்சியங்கள் சில அதில் உள்ளன. ஆனால், இன்று அத செயலாற்றும் உணர்ச்சியும் வழிமுறைகளும், செயலாற்றுகிற அதன் நபர்களும் இம்மாகாணத்தின் திறமையும் சுயமரியாதை உணர்வும் கொண்ட பார்ப்பனரல்லாத மக்கள் சிலருக்கு ஏற்றனவாகா. சமூகத்திலே தீவிர மாறுதல் விரும்புகிறவனும், தரையிலே காலை அழுந்தி ஊன்றவும் அவகாசமில்லாத அவசரம் கொண்ட அரசியல் லட்சிய வாதியுமாகிய பலர் காங்கிரஸை இன்று கைப்பற்றி முழு ஆதிக்கம் செலுத்தலாகி விட்டார்கள். நோக்கம் ஜனநாயகமானாலும், நடைமுறைகள் இன்று ஏகாதிபத்திய தோரணையிலேதான் நடைபெற்று வருகின்றன. தேசத்தையும் தேச மக்களையும் நன்கறிந்த, பொறுப்பை சரிவர உணர்ந்த அறிவும் மனசாட்சியும் கொண்ட அரசியல் வாதிகள் திரும்பவும் காங்கிரஸ் ஸ்தாப

னத்தைக் கைப்பற்றி மக்களின் இன்றைய உண்மை நிலைக்கேற்ப அதை நடத்திச்செல்ல முன் வரவேண்டும் என்று மனமார நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

சாதி ஆட்சி கிடையாது

இன்றுள்ள சூழ்நிலையிலே நம்மைப் பொருத்தமட்டில் மாறுதல்கள் புகுத்தப்படுவதை நாம் வரவேற்கவில்லை. சாதி அல்லது வகுப்பு ஆட்சியை நாம் கண்டிருக்கிறோம். இந்தியாவின் மெய்யான சிறந்த நலனை முன்னிட்டு, நாட்டு அரசாங்கம் நீதி, சமத்துவம் என்ற பிரிட்டிஷ் கொள்கைகளின்படி இனியும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்று கருதுபவர்கள் நாம். பிரிட்டிஷ் ஆட்சியிலே நமக்கு ஆழ்ந்த விசுவாசமும் அன்பும் உண்டு; காரணம் அதிலும் பல குறைபாடுகளும் அவ்வப்போதைய ஊழல்களும் உள்ளன என்றாலும், அந்த ஆட்சி பிரதான அம்சங்களாக நீதி இரக்கம் இவைகளைக் கொண்டது. தெளிவாகவும் சந்தேகமில்லாமலும் தோன்றும் பொதுஜன உணர்ச்சிக்கும் கருத்துக்கும் மதிப்பு கொடுத்து நாளடைவில் நம்மை ஆளுவோர் தமது ஆட்சியை நல்ல முறையில் மாற்றிக்கொள்ளுவார்கள் என நம்புகிறோம். எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளுமுன், ஒவ்வொரு ஜாதி. வகுப்பு, சமூக மக்களின் விருப்பத்தையும் நலன்களையும் இப்போதைவிட அதி ஜாக்கிரதையுடனும் சிரத்தையுடனும் சம்பிரதாய முறையில் அல்லாமல் ஆராய்வார்கள் என எதிர்பார்க்கிறோம். சமூக ஏகபோக பாத்தியதை உணர்ச்சியும், ஜாதி வகுப்பு கெடுபிடியும் மறைய ஆரம்பிக்கும்போது, சுய ஆட்சிப் பாதையில் நமது முன்னேற்றம் கண்டிப்பாக, வெகுவில் திருப்திகரமாகவே இருக்கும்.

ஆனால் தற்சமயத்துக்கு அனுபவ அரசியல் வாதி தன் முன் உடனடியாகவுள்ள பிரச்னையையே கவனிக்கவேண்டியவனாக இருக்கிறான்.

சம அதிகார வினியோகமீது சுய ஆட்சி

யுத்தம் வெற்றிகரமாக முடிவானதும், பிரிட்டிஷ் பார்லிமெண்டும் ராஜதந்திரிகளும் நிச்சயமாக இந்திய அரசியலமைப்பை ஆலோசிப்பர். இந்தியா தன் அரசியலமைப்பின் அடிப்படை பரந்தும் ஆழ்ந்தும் இருக்க வேண்டுமென கோர உரிமை உண்டு அந்தஸ்துக்கும் எண்ணிக்கைக்கும் ஏற்ப ஒவ்வொரு ஜாதி, வகுப்பு, சமூக மக்கள் பிரதிநிதிகளும் தேச நிர்வாக காரியங்களிலே பிரதானம் பொருந்திய இடம்பெற வேண்டும் என்றும், உள்நாட்டு விவகாரங்கள் பற்றிய கொள்கையிலும் பொருளாதார நிலையிலும் பூரண சுதந்திரமும் சட்டசபை சுயாட்சியும் வேண்டும் என்று கேட்கப்படும். கடைசியாக சாம்ராஜ்யத்திலே இந்தியாவுக்கென ஒரு இடம் தரப்பட வேண்டும்; அந்த இடம் சாம்ராஜ்யத்தின் எந்த ஒரு சுயாட்சி நாட்டின் அல்லது பிரிட்டிஷ் மக்களின் கண்ணியத்தைக் குறைந்ததாக இல்லாமல், இந்தியரது சுயமரியாதைக்கு ஏற்றதாக இருக்கவும் வேண்டும்.

பார்ப்பனரல்லாதாரின் உடனடி கடமை

பார்ப்பனரல்லாத (திராவிட) பிரஜைகள் விழிப்படைந்து செயலாற்ற வேண்டுமாய் நாம் கேட்டுக்கொள்

கிரோம். அவர்கட்கு முன்னுள்ள பிரச்னை பெரிது, சிக்கல்கள் நிறைந்தன. முதலில் அவர்கள் தத்தம் பையன்களை யும் பெண்களையும் பெருவாரியாக, இதுவரை செய்ததை விட இன்னும் அதிகமாக படிக்கவேண்டும். பார்ப்பன ரல்லாதாரர் தலைமை ஏற்கத் தகுதியுடைய கனவான்களின் பொறுப்புள்ள தலைமையின்கீழ், சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டு ஒவ்வொரு முக்கிய நகரிலும் திறமையுடன் நடத்தப் படவேண்டும்; கிடைக்கக்கூடிய கல்வி வசதிகள் சகலத் தையும் எல்லா பார்ப்பனரல்லாத வகுப்பு மக்களும் பயன் படுத்திக் கொள்ளுதல் வேண்டும்; இதோடு மட்டு மல்லாமல், ஏழைகளாய் ஆனல் புத்திசாலிகளாய் உள்ள, பண உதவி யில்லாமல் கல்விபெற முடியாதவர்களாய் உள்ள சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வியளிக்கப் போது மான நிதி திரட்டவும் சங்கங்கள் தொண்டாற்றுதல் வேண்டும். உண்மையாகவே, பார்ப்பனரல்லாதாருக்கு (திராவிட மக்களுக்கு) இன்னும் அதி தீவிர கல்வித்திட்டம் நீண்ட காலமாகத் தேவையாக இருந்து வருகிறது. பார்ப்பனரல்லாத வகுப்பு மக்களின் கல்வி முன்னேற்றத் துக்கென சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்போது, உடனுக் குடன் அவ்வப்போது, சமூக அரசியல் கழகங்களும் ஏற் படுத்தப்படுதல் வேண்டும். அவசியமாக உள்ள இடங் களிலே, ஆங்கில, தமிழ்ச் செய்திப்பத்திரிகைகளைத் தாங்க ளாகவே, தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த நல்ல முறை யில் நடத்தப்படவேண்டும்.

வாய்மூடி செயலற்று இருந்த போக்கு காரணமாகவே அவர்களது கோரிக்கைகள் இதுவரை கவனிக்கப்பட வில்லை. அவர்களைவிட தகுதியில் குறைந்தவர்கள் தங்களு டைய காரியங்களுக்காக அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதனலே பார்ப்பனரல்லாதா (திராவிட)

ருள் அதிருப்தி ஏராளமாக வளர்ந்தது; பார்ப்பன(ஆரிய)த் தோழர்களின் நிலைமை நாள் தோறும் சிறக்கலாயிற்று. ஒருக்கால் இது விவரங்களை சர்க்கார் அறியாதிருக்கலாம்! அதிருப்தி நாள்தோறும் வளர்ந்து வருகிறபடியால் சர்க்காரின் கவனம் இதுபற்றி இழுக்கப்படும். ஆனால் பார்ப்பனரல்லாதார் முதலில் தங்களுக்குத்தாங்களே உதவிக் கொள்ளவேண்டும். பரந்த நிரந்தர அடிப்படையில் அவர்கள் தொடர்ந்து கல்வி, சமூகம், அரசியல், பொருளாதாரம் இத் துறைகளில் அபிவிருத்தியடைய அவசியமானவற்றை எல்லாம் செய்து வருவார்களாக. பிறகு, பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையில் அவர்களின் எதிர்காலம் இன்றைவிட அதிக பிரகாசமாகவும் அதி வளப்பமாகவும் அமையும். "இன நிர்மாணம்" எனப்படுவது சிரமமான காரியம்; ஒவ்வொரு வகுப்பும் சாதியும் தன் தன் கடமையை முதலாவதாகக்கொண்டு, சரியான காலத்தில் மாறுதலை சிறுகச் சிறுக அடையும் வழியில் அவசியமான அளவு தொண்டாற்ற வேண்டும். இன்னும் கொஞ்ச காலத்துக்கேனும், ஒவ்வொரு சமூகமும் தன்னை முறைப்படி சரி செய்து கொள்ளவேண்டும் என்பது நமது திடமான கொள்கையாகும்.

—பி. தியாகராய செட்டியார்.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை